செய்தி வெளியீடு எண்: 24 நாள்: 14.01.2013

**இந்த ஆண்டு பொங்கல் திருநாளையொட்டி 1725 தமிழக காவல்துறை மற்றும் சீருடை அலுவலர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணை**

தமிழ் நாட்டில் காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித் துறை, சிறைத்துறைகளில் பணியாற்றும் அதிகாரிகள் தமது பணியில் வெளிப்படுத்தும் நிகரற்ற செயல்பாட்டினை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வண்ணம் ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று தமிழக முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன.

2. இந்த ஆண்டு, காவல் துறையில் காவலர் மற்றும் தலைமைக் காவலர் நிலைகளில் 1540 அதிகாரிகளுக்கு "தமிழக முதலமைச்சரின் காவல் பதக்கங்கள்" வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள், மேலும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் முன்னணி தீயணைப்போர், ஓட்டுநர் கம்மியர், ஓட்டுநர் தீயணைப்போர் மற்றும் தீயணைப்போர் ஆகிய நிலைகளில் 120 அலுவலர்களுக்கும், சிறைத் துறையில் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை வார்டர்கள் 60 அதிகாரிகளுக்கும் 'தமிழக முதலமைச்சரின் சிறப்பு பணிப்பதக்கங்கள்' வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். மேற்படி பதக்கங்கள் பெறுபவர்களுக்கு சென்ற ஆண்டுவரை ரூ.100/- மட்டுமே மாதாந்திர பதக்கப்படியாக வழங்கப்பட்டு வந்தது, அதனை இந்த ஆண்டு முதல் ரூபாய் 200/– ஆக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

3. மேலும், காவல் வானொலி பிரிவில் பணியாற்றும் 2 அதிகாரிகள், நாய் படைப் பிரிவில் பணியாற்றும் 2 அதிகாரிகள் மற்றும் ஒரு காவல் புகைப்படக் கலைஞர் ஆக மொத்தம் 5 அதிகாரிகளுக்கு அவர்களது தொழிற்சிறப்பு மற்றும் மாசற்ற பணியை அங்கீகரிக்கும் வகையில் தமிழக 'முதலமைச்சரின் காவல் தொழில்நுட்ப சிறப்புப் பணிப் பதக்கம்' வழங்கப்படுகிறது. இப்பதக்கங்கள் பெறும் அதிகாரிகள், ஏற்கனவே சென்ற ஆண்டுவரை வழங்கப்பட்டு வந்த ரொக்கத் தொகையான காவலர் மற்றும் தலைமைக் காவலர் நிலையில் ரூபாய் 2 ஆயிரம், ஆய்வாளர் நிலையில் ரூபாய் 3 ஆயிரம் மற்றும் துணைக்காவல் கண்காணிப்பாளர் நிலையில் ரூபாய் 5 ஆயிரம் என்பதை உயர்த்தி ஒவ்வொரு நிலையிலும் ரூபாய் ஆயிரம் கூடுதலாக வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் காவலர் மற்றும் தலைமைக் காவலர் நிலையில் ரூபாய் 3 ஆயிரமும், ஆய்வாளர் நிலையில் ரூபாய் 4 ஆயிரமும் மற்றும் துணைக்காவல் கண்காணிப்பாளர் நிலையில் ரூபாய் 6 ஆயிரமும் முறையே பெறுவார்கள்.

இதற்கென நடைபெறவுள்ள சிறப்பு விழாவில் மேற்படி பதக்கங்கள் அறிவிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பதக்கங்கள் வழங்கப்படும்

**ரா.ராஜகோபால்**
அரசு முதன்மைச் செயலர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
சென்னை – 9.

வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9